முருகப்பெருமான் துணை

**மகான் மெய்ப்பொருள் நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.11.2023**, வியாழக்கிழமை

1. அருட்சுடரே அரங்கா வாழ்க
அன்னதான வள்ளலே தேசிகா
பொருள்பட பேருலகை காத்திட
புண்ணிய வழிகாட்டும் குருராசா
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது துலைதிங்கள்
வரமென முப்பான் திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 30 ம் நாள், 16.11.2023, வியாழக்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி தனை
3. ஆசிதனை மெய்ப்பொருள் நாயனாரும்
அருளுவேன் உலகம் நலம்பெற
ஆசிதந்து அரங்கமகா ஞானியும்
அனைவருக்கும் மெய்ஞானம் அருளிவர
4. வருகவே அரங்கன் வாழுகின்ற
வரம் மிகுந்த பிரணவக் குடிலை
பெருமைபட உலகோர் அடைந்து
பூரண முழுமதி காலம் தன்னில்
5. தன்னில் ஞானிகள் பூசை கலந்து
தவசி அரங்கனிடம் தீட்சைபெற்று
நன்னயமாய் பூசைமுறை தொடர
ஞானிகளின் ஆசிபலம் கூடி
6. கூடியே மெய் ஞானவான்கள் ஆவர்
குறையிலா தருமம் வளர
தேடியே அரங்கன் வழங்கும் அன்னதானமதை
தேசமெங்கும் மக்கள் செய்யும் வண்ணம்

7. வண்ணமுடன் பலகிளைகள் துவக்கி
வையகமே பசிபிணியற்ற நிலையாக
மண்ணுலகில் மாறும் வண்ணம்
மாதரும சேவை செய்துவர

8. வருகவே தருமபலம் மிகுந்து
வளமும் இயற்கை பலமும் கூடி
பெருமை மிக்க ஞானவான்கள் ஆளும்
புண்ணிய பூமியாக உலகம் மாறும்

9. மாறுதலை செய்யும் அவதாரம்
மகான் அரங்கன் எடுத்திருக்க
ஆறுமுகனாரின் சக்தி கலந்த
அற்புதம் பல நடத்தி வர

10. வருகவே அரங்கனை தொடரும்
வல்லமையான சீடர்கள் அனைவரும்
வருங்காலம் மாற்றுகின்றவர்களாக
வரலாறு படைக்கின்றவர்களாகத் தேறுவர்

11. தேறவே சுத்த சன்மார்க்க நெறி
தெய்வநெறியாக ஏற்கப்பட்டு
அறத்தோடு வாழ்க்கை முறை தொடரவே
அகிலம் சடுதி மாற்றம் காணும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–